
R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
December 2021

ஹெவன் டிவியில் ஒவ்வொரு வாரமும் வியாழக் கிழமை
கிறிஸ்துவின் சபை போதகர்கள் செய்தி கொடுக்கிறார்கள்






ஒவ்வொரு வாரமும் தவறாது பாருங்கள்!
உங்களுடைய சபையாரைப் பார்க்க சொல்லுங்கள்!!
உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்!!!

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant

---

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 | டிசம்பர் 2021 | கனி 1

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39


பாடம் : 24
தலைப்பு : உபவாசம் – Fasting
வேத வாசிப்பு : மத்தேயு 6:16,17

1. மாயைக்காரரைப்போல இருக்கக்கூடாது - மத்.6:16
2. தேவனுக்கு ஏற்ற உபவாசம் - பசியுள்ளவனுக்கு - ஏசா.58:7
3. மணவாளன் தங்களோடிருக்கையில் - மத்.9:15

குடும்பமாக கர்த்தருடைய பணியைச் செய்ய ஒப்புக்கொடுக்கப் பட்டவர்கள் தேவை
6379350509

தேவன் உன் இருதயத்தை
அமைதிப்படுத்தி,
உன் கவலை அனைத்தையும் நீக்கிப்போடுவார் - ஆமென்






God will calm
Your heart and
take away all of your anxiety - Amen

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA





# வேத அறிவுப் போட்டி எண்: 256

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்று எந்த ராஜாவுக்கு சொல்லப்பட்டது?
2. மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் அரிவாளைப் பூமியின்மேல் நீட்டும்போது பூமியின் விளைவு என்னவானது?
3. கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்: யேகோவா என்பது என்ன?
4. மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் எப்படியிருக்கவேண்டும்?
5. என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
6. கர்த்தர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எவருடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்?
7. தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிற பாவிகளெல்லாரும் எதினால் சாவார்கள்?
8. இயேசுவானவர் போஜனம்பண்ணுகிறதற்கு முன் கைகழுவாமலிருந்ததை எவன் கண்டு ஆச்சரியப்பட்டான்?
9. நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ, என்று எவனைப் நோக்கி கர்த்தர் சொன்னார்?
10. நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும் என்றவர் யார்?

## வேதாகம ஆய்வு... 41 ஏசா Esau



1. ரோமமுள்ளவன்
2. ஈசாக்கின் இரட்டை பிள்ளைகளில் மூத்தவன்
3. வேட்டையில் வல்லவன் – ஆதி.25:27
4. இஸ்மவேலின் குமாரத்தியை விவாகம் செய்தான்
5. சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டான் – எபி.12:16
6. கர்த்தர், ஏசாவை நான் வெறுத்தேன் என்கிறார் – ரோம.9:12
7. இவனைப்போல சீர்கெட்டுபோய்விடாதிருக்க எச்சரிப்பு – எபி.12:16

சிறுவர் பகுதி

## இயேசு இரட்சகர் - Jesus, The Saviour



என்ன தம்பி, தங்காய்! சந்தோஷமாக இருக்கிறீங்களா? அப்பா, அம்மாவுக்கும் உங்க டீச்சருக்கும் கீழ்ப்படிந்து சமத்தா இருப்பீங்க. அப்படித்தானே! அப்போது தான் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். OK வா?

இன்றைக்கு, நம்ம இயேசு இரட்சகரைக் குறித்து தெரிந்து கொள்ளப்போறோம். போன மாதம் படித்தோமல்லவா, மனுஷன் கீழ்ப்படியாம போனதால் தண்டனை பெற்றான், சாபம் வந்தது. பாவம் வந்தது. ஆம், ஆதாம் கீழ்ப்படியாமல் போனதால் எல்லாருக்குள்ளேயும் பாவம் வந்திருச்சு அதனாலே தேவன் தாம் உண்டாக்கின தம்முடைய பிள்ளைகள் மேல் இரக்கம் வைத்து, எல்லாரையும் பாவத்திலிருந்து, தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி இயேசுவை உலக இரட்சகராக அனுப்பினார். இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே மனுஷசாயலாக மரியாள் என்ற ஒரு கன்னிப் பெண்ணுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். ஆனா, நம்மையெல்லாம் பாவத்திலிருந்து இரட்சிக்கணுமில்லையா? அதனால் நம்மைப்போலவே மனுஷனாகப் பிறந்தாரு.

பாருங்க, அன்றைக்கு ஆதாம் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிடப்பட்டு சந்தோஷத்தை இழந்தான் அல்லவா அதே சந்தோஷத்தை மனுஷர் எல்லாரும் பெற வேண்டும்னு சொல்லி இயேசு இரட்சகர் இவ்வுலகத்தில் பிறந்தாரு! அவர் உலகத்திலே பிறந்தபோது தேவதூதன் தோன்றி "...இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2:10,11) என்று சொன்னாரு.

அப்பப்பா, எவ்வளவு சந்தோஷம்! தேவன் நம்மேல் எவ்வளவு அன்பயிருக்கிறாரு. அதனாலே தான், நாம் தண்டிக்கப்படக் கூடாது நாம் பாவமில்லாம மிகுந்த சந்தோஷத்தோடே இருக்கணும் இயேசுவையே இவ்வுலகத்தில் பிறக்கப் பண்ணிட்டாரு இயேசு பிறந்ததாலே நமக்குத் எந்த தண்டனையுமில்லை! பாவத்திலிருந்து விடுதலை! நமக்கு மட்டுமல்ல தம்பி, தங்காய்! இந்த பூமி முழுவதுக்கும் சமாதானம், சந்தோஷம் இயேசுவை யாரெல்லாம் விசுவாசித்து, அவர் தான் நம்மை பாவத்திலிருந்து விடுவிப்பார் என நம்புகிறார்களோ, அவர்கள் எல்லாருக்கும் சந்தோஷம் சமாதானம் தான். இந்த இயேசு இரட்சகரை நாம் நம்பி, அவரிடத்தில் அன்பாயிருந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருப்போமா? சந்தோஷம், சந்தோஷம் தான். இனி எந்த தண்டனையும் இல்லை. ஆஹா, சந்தோஷம் பொங்குதே, சந்தோஷம் பொங்குதே என்று பாடுவோம்.

**மனப்பாடவசனம்**

**"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது"... – 1தீமோத்தேயு 1:15**

**புத்தாண்டை எதிர்நோக்கியுள்ள அனைவருக்கும்**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**


Wish You A Happy New Year - 2022



# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 22 டிசம்பர் - 2021 கனி - 1

ஆசிரியருரை

## இஸ்ரவேலின் நான்கு பெரிய பாவங்கள் Four Greater Sins of Israel



**பாவங்கள்** பலவழிகளில் மனிதனை தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடச் செய்கிறது. இதில் இஸ்ரவேலர் நான்கு விதமான பாவங்களில் விழுந்து தேவனுக்குக் கோபத்தை உண்டுபண்ணினார்கள். **முதலாவது** கொடிதான அருவருப்பை கர்த்தர் அவர்களுடைய வாழ்வில் கண்டார். "நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தன. இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன்தன் கையிலே தன்தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்" (எசே.8:10-12).

இன்றைக்கும் பலவீடுகளில் பாரம்பரியமாக அநுசரித்து வந்த அந்த வீணான விக்கிரகங்களை அழித்துப்போடும்படியாக எண்ணங்கொள்ளாமல் அதை அப்படியே வைத்திருப்பார்கள். வீடுகளில் உள்ள சிலபலவீனர்கள் அதை வணங்கிக்கொண்டும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டும் அதை நமஸ்கரித்துக்கொண்டும் இருப்பார்கள். அப்படிப்பட்ட வீணான விக்கிரகங்களை முழுவதுமாக அழித்துப்போடும்படியான கட்டளை ஆதியிலே கர்த்தரால் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதைக்குறித்து உபா.12:1-3 வசனங்களில் வாசிக்கும்போது; "உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக்கொடுக்கிற தேசத்திலே, நீங்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கைக்கொண்டு நடக்கவேண்டிய கட்டளைகளும் நியாயங்களுமாவன: நீங்கள் துரத்திவிடும் ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்த உயர்ந்த மலைகளின்மேலும், மேடுகளின்மேலும், பச்சையான சகல மரங்களின் கீழுமுள்ள இடங்களையெல்லாம் முற்றிலும் அழித்து, அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை அக்கினியால் சுட்டெரித்து, அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை நொறுக்கி, அவைகளின்

பேரும் அவ்விடத்தில் இராமல் அழியும்படி செய்யக்கடவீர்கள்" என்றார். அந்தப்படியாக அந்நாட்களில் வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள் அவைகளை அழித்துப்போட்டனர். நாளடைவில் அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் அதற்கு தூபங்காட்டவும் துணிந்து செயல்பட ஆரம்பித்தனர். இது கர்த்தருக்கு அவருவருப்பாக இருந்தது. இதனால் அவர்களை கர்த்தர் கைவிட்டார். ஆகையால் இஸ்ரவேலில் அநேகர் கர்த்தர் எங்களை கைவிட்டார். எங்களுடைய விண்ணப்பத்தை தள்ளிவிட்டார். அவர் எங்களை நோக்கிப்பார்க்கிறதில்லை என்று சொல்லி வீணான விக்கிரகங்களை நாடஆரம்பித்தனர். கண்ணை உண்டாக்கினவர் காணாதிருப்பாரா? காதை உண்டாக்கினவர் கேளாதிருப்பாரா? அவர்கள் சற்றும் சிந்திக்காமல் விக்கிரகங்களை நாடினர். இந்த கொடிய அருவருப்பை இஸ்ரவேலிலே கர்த்தர் கண்டு தீர்க்கதரிசியாகிய எசேக்கியாவைக் கொண்டு எச்சரித்தார்.

**இரண்டாவது அதிக அருவருப்பு** என்னவென்றால்; "பின்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று அவர் என்னுடனே சொல்லி, என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டுபோனார்; இதோ, அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்" (எசே.8:13-14). நாம் கேள்விப்படுகிறோம் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாக, இந்த தம்மூசு என்ற விக்கிரகம் பெண்கள் வழிபடும் ஒரு விக்கிரகமாக இருந்தது. இதை சாலொமோனை வழி விலகிப்போகப்பண்ணின பெண்கள் வழிபட்டனர். சீதோனியரின் தேவி என்று அழைக்கப்பட்டது. "சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான்" என்று 1இரா.11:4,5-வசனங்களில் வாசிக்கிறோம். சிலர் விக்கிரக ஆராதனை செய்கிற குடும்பங்களில் சம்பந்தம் கொள்ளுகின்றனர். அவர்கள் தங்களுடைய விக்கிரங்களை விட்டுவிடாமல் அவைகளை மறைமுகமாக வைத்து நமஸ்கரித்துக்கொண்டிருப்பார்கள். அது அக்குடும்பங்களுக்கு பெரிய பாவத்தைக்கொண்டு வரும். யாக்கோபின் மனைவி ராகேல் தன் தகப்பனாகிய லாபானுடைய சுரூபங்களை திருடி ஒட்டகசேணத்திற்குள் வைத்துக்கொண்டாள். பின்பதாக யாக்கோபு தன் குடும்பத்தாரிடத்தில் இருந்த விக்கிரகங்களையும் அந்நிய தெய்வங்களையும் வாங்கி ஒரு கர்வாலிமரத்தின் கீழ் புதைத்துப்போட்டான் எனக் காண்கிறோம். அதை அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வீட்டிற்கு சாபத்தை கொண்டுவந்துவிடுவார்கள் என்று அறிந்த யாக்கோபு அவைகளை அழித்துப்போட்டதைப்போல இன்று ஒவ்வொரு குடும்பத்தலைவர்களும் பெண்கள் மறைமுகமாக வைத்து வழிபடுகிறதான விக்கிரகங்களை அழித்துப்போட தயங்கக்கூடாது. அவைகள் கர்த்தருடைய பார்வையில் அதிக அருவருப்பாக இருக்கிறது.

**மூன்றாவது இதிலும் அதிக அருவருப்பை** கர்த்தர் இஸ்ரவேலில் காண்டார். அது என்னவென்றால்; "அவர்; மனுபுத்திரனே, இதைக் கண்டாயா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று என்னுடனே சொல்லி, என்னைக் காத்தருடைய ஆலயத்தின் உட்பிரகாரத்திலே



"...உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" (யோசு.2:11) என்று விசுவாசித்தாள். விசுவாசித்ததோடே நின்றுவிடாமல் தானும் தன் குடும்பமும் காக்கப்படும்படி கிரியை நடப்பித்தாள். "அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாகக்கப்பட்டாள்?" (யாக்.2:25). இந்த ராகாப் என்னும் கானானிய வேசி விசுவாசத்தினாலே கிரியை நடப்பித்தபடியினால் "....அவள் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிறாள்" (யோசு.6:25). அதுமாத்திமல்லாது விசுவாசிகளின் பட்டியலில் இடம்பெற்ற இவளது பெயர் இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது (மத்.1:5).

பார்த்தீர்களா? ராகாபின் விசுவாசத்தைப் போலவே இந்த சிரபோனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க (கானானிய) ஸ்திரீயின் விசுவாசமும் பெரிதாயிருந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அதிசீக்கிரமாய் இருக்கிறது என்பதை அறிவோம். மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்து வரும்போது நம்மில் அவிசுவாசத்தை அல்ல, விசுவாசத்தைக் காண வேண்டும். நம்முடைய விசுவாசம் பெரிதாயிருக்க தேவன் தாமே நம்முடையவிசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவாராக! ஆமென்.

## *நடப்புச் செய்திகள்*

- **கொரோனா தொற்றிலிருந்து ஜனங்களை காப்பாற்ற உலக சுகாதார அமைப்பு போராடிவருகிறது.**
- **பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்ற: கேரள முதல்வர்**
- **தேசிய பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 5 கோடியாக உயர்வு**
- **விண்வெளி அறிவியல் அதிசயம் பால்வெளிக்கு வெளியே முதல் கோளைக் கண்டு பிடித்த நாசா. இது 28 மில்லியன் (2.8 கோடி) ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது.**

### ஜெபியுங்கள்

- வரவிருக்கும் புதிய ஆண்டிற்காக...
- தேவபிள்ளைகள் நல்ல பல தீர்மானங்களை எடுக்க...
- பரிசுத்தமாக வாழும்படி தங்களை ஒப்புக்கொடுக்க...
- தேவசித்தத்தை அறிந்து அதன்படியாக நடக்க...
- நம் இந்திய தேசத்தில் யாவரும் கர்த்தரை அறிந்துகொள்ள...
- அநேக சபைகள் எழும்ப...
- நம் தேசம் பாதுகாக்கப்பட...






மாத இதழுக்கான சந்தா செலுத்த இரு வழிகள்

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

உம்முடைய ஆசீர்வாதத்தை பெற நான் தகுதியற்றவள் என்று சொல்லியிருப்போமா? மேலும் "அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்" என்பதாக மத்.15:27ல் வாசிக்கிறோம். அப்படியானால் இவள் தன்னை நாள்க்குட்டி என்று ஒப்புக்கொள்ளுகிறாள் என்று தானே பொருள்! நாய்க்குட்டிகள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் எச்சில் துணிக்கைகளைத் தின்னுமே அந்த மிச்சம் மீதம் என்க்குகிடைத்தால்போதும் என்று மிகவும் தன்னைத் தாழ்த்துகிறாள். நாம் இந்த அளவுக்கு நம்மைத் தாழ்த்தியிருக்கிறோமா? நாமோ நம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களிலும் நாங்கள் எதில் குறைந்தவர்கள் என்று சொல்லுவதோடுகூட மற்றவர்களை அற்பமாக எண்ணி மேட்டிமை சிந்தை உள்ளவர்களாக இருக்கிறோமா? தேவனுக்கு முன்பாக நாம் நாய்க்குட்டிகள் மாத்திரமல்ல, அவரைச் சுமக்கும் கழுதைக்குட்டிகளாகவும், அற்பரும் நீசருமாயிருக்கிறோம்.

நான் ஒன்றுமில்லை, இயேசு வல்லவர், அவர் மாத்திரமே என் மகளை குணமாக்கமுடியும் மற்றவர்கள் என்னை எவ்வாறு நினைத்தாலும் பரவாயில்லை, தேவன் மாத்திரமே என் வாழ்வில் அற்புதம் செய்யக்கூடியவர். அவரை விட்டால் வேறுவழியே இல்லை என்று சொல்லி இவள் கீழே விழும் மிச்சம் மீதிமான துணிக்கை ஆசீர்வாதம் கிடைத்தால் போதும், அதையாவது எனக்குத் தாரும் இயேசுவே என்று கூறுவதைப் போலிருக்கிறதல்லவா? ஆம், இந்த ஸ்திரீ, ஒரு அந்நிய ஸ்திரீ, இஸ்ரவேலரால் பகைவர்களாக எண்ணப்பட்ட கானான் வம்சத்தவள் எனவே தான் ஆசீர்வாதத்தைப் பெற தகுதியில்லாதவளாக இருந்தபோதிலும் தான் இயேசுவினிடத்தில் கொண்ட நம்பிக்கையினை வெளிப்படுத்துகிறாள். அவளுடைய பணிவு, அவளுடைய ஊக்கமான விடாப்பிடியான வேண்டுதல் அவளுடைய மகளுக்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலைமட்டுமல்லாது இயேசுவால் புகழப்படுவதற்கு ஏதுவானவளாக மாறுகிறாள். "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமடைந்தாள்" (மத்.15:28). என்ன அற்புதம் இது! இவளைப்போலல்லாது நாம் பெருமையுடையவர்களாய் இருந்து கொண்டு, ஏதேனும் தேவ சமூகத்திலிருந்து பெற்றுவிடலாம் என்று நினைப்போமானால் ஏமாற்றம் தான் அடைவோம். பெருமையுள்ளவர்களுக்குக் கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். அன்று மோசேயின் சகோதரன் ஆரோனும் சகோதரி மிரியாமும் மோசேக்கு விரோதமாக பேசி, "...எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்" (எண்.12:2). "கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது... மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்; ..." (எண்.12:9-10). நம்மிடத்தில் இவ்வாறான மேட்டிமை சிந்தினை இருக்குமானால் அதனைக் களைந்து விட்டு நம்மைத் தாழ்த்துவோம். இயேசுவின் வல்லமையில் விசுவாசம் கொள்ளுவோம். இஸ்ரவேலின் தேவன் உயர்ந்தவர், அவர் வல்லமையுடைவர் மகிமையானவைகளைச் செய்ய வல்லவர். இதை அறிந்த கானானிய ஸ்திரீயின் விசுவாசம் பெரிதாயிருந்தது. இவளைப் போலவே யோசுவாவின் நாட்களில் ராகாப் என்ற கானானிய வேசி கர்த்தரின் வல்லமையைக் குறித்து அறிந்தவளாக



கொண்டுபோனார்; இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர், தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த்திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்" (எசே.8:15,16). தேவனால் உண்டாக்கப்பட்டவைகளை நமஸ்கரிக்கும்படியாக கர்த்தருடைய ஆலயத்திலே இதை துணிந்து செய்தார்கள். உலகத்திலே உண்டாக்கப்பட்டவைகள் எல்லாம் மனிதனுடைய நன்மைக்காக உண்டாக்கப்பட்டவைகள், இதை மனிதன் அறியாது சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும், ஊரும்பிராணிகளையும், கடல்வாழ் சந்துக்களையும் நமஸ்கரித்துக்கொண்டிருக்கிறான். இவைகளை உண்டாக்கின கர்த்தருக்குத்தான் எவ்வளவு வேதனையாக இருக்கும்! என் அன்பு சகோதரனே, சகோதரியே, இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே! சற்றே சிந்தித்துப்பார். இஸ்ரவேலர் செய்த இந்த அருவருப்பான காரியங்களை நீயும் செய்யாதே, உண்டாக்கின தேவனை தொழுதுகொள் அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய். வீணானவைகள் உன்னை ஒருபோதும் இரட்சிக்காது, உன்னுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவும் செய்யாது. ஏனென்றால் அவைகள் பூமியில் மனிதனுடைய எண்ணத்தினால் உண்டானவைகள். வானமும் பூமியும் அழியும்போது அவைகளும் ஒருநாளில் அழிந்துபோம்.

**மேலும், இஸ்ரவேலர்** "எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். நாங்கள் வானராக்கினிக்குத் தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்" என்றார்கள் (எரே.44:17,18). அற்புதவிதமாக வனாந்தரத்தில் 40 வருடங்களாக மன்னாவினாலும் காடைகளினாலும் போஷித்து வந்த கர்த்தரை மறந்து. நாங்கள் விக்கிரங்களை நமஸ்கரித்தபோது அப்பத்தினால் திருப்தியாகி ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்தோம் என்று வாய் கூசாமல் சொன்னார்கள். மேலும் பஞ்சத்தாலும் பட்டயத்தாலும் அழிந்துபோனோம் என்றார்கள். எல்லாவித நம்மைகளையும் நமக்குச் செய்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர். அவர் நல்லோர்மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறவர். ஆதிமுதலாக மனிதனுக்கு தேவையான எல்லாவற்றையும் கொடுக்கும் பூமியை உண்டுபண்ணினார். அந்த ஜீவனுள்ள கர்த்தரை மறந்து அந்நிய தேவிகளையும் அந்நிய தேவர்களையும் நாடி அதை நாங்கள் நாடாதபடியால் எங்களுக்குக் குறைவுபட்டது என்று சொன்னது எவ்வளவு வேதனையை கர்த்தருக்குக் கொடுத்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். உங்களுக்கு ஒருவர் நன்மை செய்திருக்கும்போது அந்த நன்மையை நீங்கள் மறந்தவர்களாகவும், அவரை கண்டுகொள்ளாதவர்களாகவும் இருந்துகொண்டு அவருக்கு விரோதமாக எனக்கு நன்மை செய்தது இந்த கல்லுதான் என்று சொன்னால் நன்மை செய்தவருக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும். அன்பானவர்களே, இஸ்ரவேலோ கர்த்தரை அறியாது போனார்கள்.

**நான்காவது யூதாவின் அருவருப்பு**; கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை நோக்கி: "மனுபுத்திரனே, இதைக் கண்டாயா? இங்கே யூதா வம்சத்தார் செய்கிற அருவருப்புகள் அற்பமான காரியமா? அவர்கள் தேசத்தைக் கொடுமையினால் நிரப்பி என்னை அடிக்கடி கோபமூட்டுகிறார்கள்; இதோ, அவர்கள் திராட்சக்கிளையைத் தங்கள் நாசிக்கு நேராகப் பிடிக்கிறார்கள்" என்றார் (எசே.8:17). திராட்சையை மனுஷனுடைய நன்மைக்காக படைத்தார். இவர்களோ அதில் ஒரு கட்டையை எடுத்துக்கொண்டு அதை நமஸ்கரிக்கவும் அதை வழிபடவும் செய்தனர். ஏசாயா மூலமாக சொல்லும்போது; "மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான்; நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான்" என்றார் (ஏசா.44:15). மனிதன் சிந்திக்காமல் அவைகளை வணங்கிக்கொண்டுவருகிறான். மூதாதையர் அதைக்குறித்த தேவையற்ற பயத்தை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீணான தேவர்களையும், தேவிகளையும் இஸ்ரவேலர் நாடி மோசம்போனதைப்போல நீங்களும்போய்விடாதிருக்க உங்களை அவைகளிலிருந்து விலக்கி பாதுகாத்துக் கொள்ளுங்கள். இஸ்ரவேலர் இப்படிப்பட்டவைகளை நாடியபடியால்; கர்த்தர் ஒரு எச்சரிப்பை அவர்களுக்குக் கொடுத்தார். "நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன்; என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை; அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை என்றார்" (எசே.8:18). அவர்களுடைய நான்குவிதமான அருவருப்பு கர்த்தருக்கு எரிச்சலை மூட்டியது. அன்பானவர்களே, கர்த்தர் கிருபையுள்ள தேவன் மன்னிக்கிற தேவன். எப்பொழுது என்றால் அருவருப்பானவைகளை நம்மை விட்டு முற்றிலும் அகற்றிப் போடும்போது. அதைச் செய்வீர்களா? இன்றே செய்யுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு இரக்கம் செய்வார்.

**இஸ்ரவேலர்கள் அந்நிய தேவர்களை அகற்றினார்களா?**

ஆம், அவர்கள் யோசுவாவின் நாட்களில் அந்நிய தேவர்களை அவர்களை விட்டு அகற்றிப்போட்டார்கள் என்று யோசுவா 24:23,24 வசனங்களில் படிக்கிறோம். "அப்பொழுது அவன்: அப்படியானால், இப்பொழுதும் உங்கள் நடுவே இருக்கிற அந்நியதேவர்களை அகற்றிவிட்டு, உங்கள் இருதயத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு நேராகத் திருப்புங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் யோசுவாவை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து, அவர் சத்தத்திற்கே கீழ்ப்படிவோம் என்றார்கள்". இவ்விதமான மனந்திரும்புதலை தேவன் எதிர்பார்க்கிறார். இன்றே நீங்களும் உங்களிடம் உள்ள வீணானா விக்கிரகங்களை அகற்றிப்போட்டு கர்த்தருக்கு நேராக உங்களுடைய இருதயத்தை திருப்புங்கள். வானமும் பூமியும் கர்த்தருடையவைகள் கர்த்தரால் உண்டாக்கப்பட்டவைகள். அவைகளை மனிதனுக்காக கர்த்தர் சிருஷ்டித்தார். நித்தியமானவரிடம் நாம் செல்லும்போது நாம் பார்க்கிற வானமும் பூமியும் அவைகளில் உண்டாக்கப்பட்ட யாவும் ஒருநாளில் அழிந்துபோகும். ஆகையால் அழிந்துபோகும் இவைகளின் மீது உங்களுடைய கவனத்தை செலுத்தி, அவைகளை நம்பி மோசம்போய்விடாதிருங்கள். கர்த்தரையும் கர்த்தருடைய உபதேசத்தையும் கைக்கொள்ளுங்கள். அவைகள் உங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும். கர்த்தர்தாமே உங்களை விக்கிரகங்களிலிருந்து காத்து இரட்சிப்பாராக!



அனைவருக்கும் இயசே தேவை. அவரிடம் வரும்போது மாத்திரமே எல்லா வேதனைகளிலிருந்தும் விடுதலையும் இரட்சிப்புமுண்டாகும். இச்செய்தியை வாசிக்கும் அன்பு தோழியே, உங்களுடைய பிரச்சனைகளும், வேதனைகளும் நீங்கி குணமடைய, சமாதானம் சந்தோஷம் பெறவிரும்பினால் இயேசுவிடம் செல்லுங்கள்.

இயேசுவின் வல்லமையை அறிந்த இவள் இயேசுவிடம் சென்று வேண்டிக்கொண்டாள். அவரை நோக்கிக் கூப்பிட்டாள். ஆனால் "அவளுக்கு பிரதியுத்தரமாக அவர் (இயேசுவோ) ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து; இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்லவென்றார்" (மத்.15:23-24). இங்கே இயேசு அவளுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல், இஸ்ரவேல் ஜனங்களிடத்திற்கே அனுப்பப்பட்டேன் என்று சொல்லியும் கூட இவள் இயேசுவை விட்டு விலகுகிறதாக இல்லை.

அவள் தொடர்ந்து இயேசுவை நோக்கி எனக்கு உதவி செய்யும் ஆண்டவரே என்று பணிந்து கொண்டாள் (வச.25). நாமும் கூட குறிப்பிட்ட காரியங்களுக்காக அநேக முறை தேவனை நோக்கி ஜெபித்திருப்போம். தேவனோ எந்த பதிலும் நமக்குத் தரவில்லையென்றால், சோர்ந்து போய் ஜெபம் செய்வதைக் கூட நிறுத்தி விடுவோம். சிலர் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தையும் இழந்து விடுவார்கள். ஆனால் இந்த ஸ்திரீயோ எனக்கு உதவி செய்யும் ஆண்டவரே என்று பணிந்து கொண்டாள் என வாசிக்கிறோம். நம்மிடம் இவ்விதமான பணிவு, தாழ்மை உண்டா? இவளுடைய பணிவினைப் பார்த்து நாமும் தேவ சமூகத்தில் நம்மைத் தாழ்த்தி வேண்டிக்கொள்வோம். இன்று அநேகர் தங்களுடைய ஜெபத்திலும் வேண்டுதலிலும் தேவனிடத்தில் அதிகாரத்துடன் கேட்கின்றனர். நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள், தீர்க்கதரிசனம் கூறுபவர்கள், பரம்பரை கிறிஸ்தவர்கள் என்று சொல்லி "...பெருமைபாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்" (ரோம.11:18). சுபாவ ஒலிவமரத்தோடு ஒட்டப்பட்ட காட்டொலிவ மரம் என்பதை மறவாமல் மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. கர்த்தரைப் பணிந்து கொண்டு விண்ணப்பம்பண்ணு. இந்தக் கானானிய ஸ்திரீயின் பணிவு நமக்குப் பாடமாக இருக்கட்டும்.

சரி, இவ்வளவு தூரம் உதவிசெய்யும் ஆண்டவரே என்று பணிந்து கொண்ட அவளுக்கு இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது. "அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்" (மத்.1:26; மாற்கு 7:27). பிள்ளைகளாகிய இஸ்ரவேலருக்குக் கொடுக்கக்கூடிய ஆசீர்வாதத்தை எடுத்து நாய் குட்டிகளைப் போலிருக்கிற அந்நிய ஸ்திரீயாகிய உனக்குக் கொடுப்பது நல்லதல்ல எனச் சொல்லுவதாகத்தானே பொருள். ஆனால் கானானிய ஸ்திரீயோ வேதனைக்குரிய இச்சொற்களைக் குறித்து கவலை கொள்ளாமல், மெய்தான் ஆண்டவரே என்கிறாள். நாமாக இருந்திருப்போமானாள் இதற்கு என்ன சொல்லியிருப்போம்?

பெண்கள் பகுதி

## உன் விசுவாசம் பெரிது
## Your Faith Is Great

-Glory Arjunan



யாருடைய விசுவாசம் பெரிது? இயேசு ஒரு ஸ்திரீயினுடைய விசுவாசத்தைக் குறித்து இவ்வாறாகப் பாராட்டுகிறார். நம்முடைய விசுவாசம் எப்பேர்பட்டது? அநேக ஸ்திரீகள், தங்களுடைய விசுவாசத்தைக் குறித்து கேட்டுவிட்டால் போதும், நான் பிறப்பிலே கிறிஸ்தவள், பரம்பரை கிறிஸ்தவள், காலை , மாலை ஜெபிக்கிறேன். தினமும் வேதம் வாசிக்கிறேன். எங்களுடைய முழு குடும்பமும் சபைக்கு ஒழுங்காகச் செல்லுகிறது. பரம்பரை பரம்பரையாக எங்கள் குடும்பத்தில் பேராயரும், ஆயரும், பாஸ்டர்மார்களும், போதகர்களும், ஊழியர்களும் இருந்து வருகின்றனர், நாங்கள் கர்த்தரையே சேவிக்கிறோம் என்றெல்லாம் சொல்லி பெருமை பேசுவர். ஆனால் ஆண்டவராகிய இயேசு இங்கே ஒரு அந்நிய ஸ்திரீயின் விசுவாசத்தைக் குறித்து இவ்வாறு கூறுகிறார். இவள் கானான் தேசத்தைச் சேர்ந்தவள். இஸ்ரவேலர் கானானியரோடு போரிட்டு கானானை சுதந்தரித்தவர்கள். இவர்கள் இஸ்ரவேலரால் தேசத்திலிருந்து அழிக்கப்பட்டார்கள் என வேதம் கூறுகிறது. கானானியர் பல தெய்வங்களையும் அருவருப்புகளையும் வணங்கினவர்கள். பாகாலையும் வணங்கினார்கள். தங்கள் குழந்தைகளையும் பல தெய்வங்களுக்குப் பலியிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. கானானியர் இப்போதிருக்கிற நவீன சிரியா, யோர்தான், லெபனான், இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்ற பகுதிகளில் 4000 ஆண்டுகளுக்கு முன்பாக் வாழ்ந்து வந்ததாகவும் வரலாறு கூறுகிறது. தேவனால் அழிக்கப்பட்ட சோதோம் நகரம் இவர்களது குடியிருப்பாக இருந்ததாகக் கருதப்படுகிறது. கானானியர் தேவனை அறியாத புறஜாதி மக்களாக இருந்தனர். இப்படியாக அந்நிய ஸ்திரீயாகிய சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயின் விசுவாசம் பெரிதாகக் காணப்பட்டது. இயேசுவே, இந்த ஸ்திரீயின் விசுவாசத்தைக் குறித்து ‘உன் விசுவாசம் பெரிது’ என்று கூறுவதைத் மத்.15:28ல் காண்கிறோம்.

இந்த ஸ்திரீ தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிட வேண்டுமென்று இயேசுவை வேண்டிக்கொண்டாள். "....ஆண்டவரே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக்கூப்பிட்டாள்" (மத்.15:22) என வாசிக்கிறோம். அந்நிய ஸ்திரீயாகிய இவளுக்கு இங்கே இயேசு தேவைப்படுகிறார். இயேசுவிடம் சென்று வேண்டிக்கொண்டால் தன் மகள் குணமடைவாள் என விசுவாசித்தாள். காரணம், இயேசு செய்துவந்த அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் குறித்து கேள்விப்பட்டிருப்பாள் அல்லது நேரில் கண்டிருக்கவும் கூடும். எனவே இயேசுவை நோக்கி வேண்டிக்கொண்டாள். நான் அந்நிய ஸ்திரீ தானே, அநேகக் கடவுள்களை தெய்வமாகக் கொண்டிருக்கிறோமே, நான் எப்படி இயேசுவிடம் சென்று வேண்டிக்கொள்வது என்றெல்லாம் சிந்திக்கவில்லை. எப்படியாயினும் தன் மகள் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும், வேதனை நீங்கி சுகமடைய வேண்டும் என்பது தான் அவள் எண்ணமாக இருந்திருக்கிறது. ஆம், நீங்கள் எப்படிப்பட்டவர்களாகவும் இருக்கலாம், தேவனை வணங்காதவர்களாகவும், இயேசுவைப் பின்பற்றாதவர்களாகவும் இருக்கலாம். ஆனால் உலகத்திலுள்ள





## ஒரு கிறிஸ்தவன் என்பதே போதுமானது
## A Christian Only

-J.C.Choate

ஆம், என்னுடைய சிநேகிதனே, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாத்திரமே இருக்க முடியும். அப்படிப்பட்ட ஒன்று மிகைப்படுத்தல் இல்லாதது. உங்களைச் சுற்றியுள்ள ஜனங்கள் அனைவரும், ஏதாவதொ ரு நாமகரண பிரிவு கூட்டம் ஒன்றிலோ அல்லது மற்றொன்றிலோ இருக்கிறபடியால் உண்மையிலேயே இதை நம்புவது என்பது கடினமானதாக உங்களுக்கு காணப்படலாம்; நீங்களும் அப்படிப்பட்ட ஒரு மனித நிறுவனத்தை சேர்ந்தவராக இருக்கலாம் ஆனாலும் இப்படி இருந்த போதிலும், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாத்திரமே இருக்க முடியும் என்பது உண்மையாயிருக்கிறது.

"நான் எவ்வாறு ஒரு கிறிஸ்தவனாக மாத்திரமே இருக்க முடியும்?" அநேகமாக இப்பொழுதே நீங்கள் அறிய விரும்பலாம்: நல்லது அந்த கேள்விக்குப் பதிலளிப்பது மிகவும் எளிமை ஆனதாயிருக்கிறது. எளியமுறையில் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அல்லது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமேயாகில் நீங்கள் தேவனுடைய சித்ததின் படியேயான சத்தியத்திற்கு கீழ்ப்படிவதினாலே நீங்கள் ஒரு கிறிஸ்தவராகலாம். இப்பொழுது நீங்கள் "நான் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறேன் அல்லது சத்தியத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறேன்" என்று விவாதம் செய்யலாம். என் சிநேகிதனே நீங்கள் அவ்விதமாக கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? தேவனோடும் நீங்கள் உத்தமமாயிருங்கள். அதைக் குறித்து எந்த சந்தேகமும் இல்லை. நீங்கள் உத்தமம் ஆனவராகவும், உண்மையுள்ளவராகவும் இருக்கிறீர்கள் ஆனால் சில சமயங்களில் உத்தமமும், உண்மையுமான ஜனங்களும் கூட தவறாக எண்ணுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டு காலங்களில் சத்தியமானது கிறிஸ்தவர்களை மட்டுமே உருவாக்கியது என்பதை இப்பொழுது தான் உற்று நோக்க வேண்டும். இல்லை, சத்தியமானது ஒரு வகையான கிறிஸ்தவனையும் பின்பு மற்றொரு வகையான கிறிஸ்தவன் என்னும் வகைவகையானவர்களை உருவாக்கவில்லை புதிய ஏற்பாட்டு சத்தியத்தை குறித்து நீங்கள் ஏதாகிலும் அறிந்திருந்தால் இதுதான் உண்மையென்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கும்.

கிறிஸ்தவன் என்ற பெயர் வேதவாக்கியங்களில் மூன்று முறை மாத்திரமே குறிப்பிடுகின்றன ஆனால் தயவு கூர்ந்து கவனியுங்கள், ஒவ்வொமுறையும் அது கிறிஸ்தவன் என்றே குறிப்பாக பேசப்பட்டிருக்கிறது அதற்கு மேலாக வேறெந்த பெயரும் சொல்லப்படவில்லை அல்லது குறிப்பிடப்படவில்லை, இதன் தொடர்பாக வேறெந்த பெயரோ, பட்டமோ கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒருவருக்கும் வழங்கப்படவில்லை. ஆனால் இப்பொழுது நாம் கிறிஸ்தவன் என்ற பெயரை அளிக்கிற வேதவசனப்பகுதிளுக்கு செல்வோம்.

**முதலாவதாக,** தயவு கூர்ந்து லூக்கா சொல்லும் வாக்கியத்தை கவனியுங்கள்: "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11:26). அவர்கள் முதலாவது அங்கே கிறிஸ்தவர்கள்

என்று அழைக்கப்பட்டார்கள். அப்போதிருந்து கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்றே அழைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள்.

**இரண்டாவதாக,** பவுல் அகிரிப்பா் ராஜாவுடனே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்படி மன்றாடுகிறார் அவருடைய பதில் "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான் (அப்.26:28). அகிரிப்பா ராஜா கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய பவுலினால் சம்மதிக்கப்பண்ணப்பட்ட பொழுது அவர் எந்த வகையான கிறிஸ்தவர் என்று ஏன் குறிப்பிடவில்லை. எளிமையாக சொல்லலாம் ஏனென்றால் அவர் வேறெந்த வகையாகவும் அல்ல, கிறிஸ்தவராகவே மாற முடியும். பவுல் ஏன் அந்த மனுஷனுக்கு இந்த வகையான கிறிஸ்தவனாக இருக்க முடியும் அல்லது அந்த வகையான கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்று போதிக்கவில்லை. ஆனால் அவர் சத்தியத்தை மட்டுமே போதித்தார் ஆகையால் அது ஒரு கிறிஸ்தவனைப் பார்க்கிலும் கூடுதலாக எதையும் உருவாக்கவில்லை, வெளிப்படையாக அகிரிப்பா ராஜாவும் வெளியரங்கமாக இதை உணர்ந்து கொண்டார்.

**மூன்றாவதாக,** பேதுரு கிறிஸ்தவனைக் குறித்து "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் (1பேது.4:6) என்று இவ்விதமாகப் பேசுகிறார். ஆகையால் ஒருவன் கிறிஸ்தவனாகப் பாடுபட வேண்டுமேயாகில் அல்லது கிறிஸ்தவன் என்ற நாமத்தைத் தரித்துக்கொள்ள வேண்டுமேயாகில் அதைக்குறித்து அவன் வெட்கப்பட வேண்டாம், ஆனால் மாறாக அவன் கிறிஸ்துவின் நாமத்திற்குப் பாத்திரமானவனாக எண்ணப்படுகிபடியால் அவன் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். மேலும் அவன் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமாக பாடுபடுகிறதற்கு முன்னுரிமை பெற்றவனாயிருக்கிறான். அதன் விளைவாக தேவன் அந்த மனுஷன் மூலமாக மகிமைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் எழுத்தாளர் கிறிஸ்தவன் என்னும் நாமத்தை குறித்துப் பேசும் பொழுது கிறிஸ்தவன் என்னும் நாமத்தை மட்டுமே பேசுகிறார் என்பதை உற்று நோக்குங்கள். ஆனால் அவர் அந்த நாமத்திற்கு முன்போ அல்லது அதன் இறுதியிலே மனுஷர் ஏற்படுத்திய பெயரை சமாளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தவில்லை நாமும் பயன்படுத்த வேண்டாம்.

இப்பொழுது இந்த எளிமையான உண்மைகளை தயவு செய்து கூர்ந்து கவனியுங்கள். ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒருவர் சத்தியத்துடனே எதையும் கூட்டாமல், குறைக்காமல் அல்லது மாற்றாக எந்த வகையிலும எதையும் சேர்க்கவேண்டாம் (வெளி.22:18,19). 2. கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும், கிறிஸ்துவை விசுவாசித்து, தன்னுடைய பாவங்களில் இருந்து மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்படுவதற்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (மாற்.16:16; அப்.2:38). 3.கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒருவர் கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்ட சபையிலே அங்கத்தினராக இருக்க வேண்டும் (மாற்.16:18; ரோம.16:16). 4) கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒருவர் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும் (1பேது.4:1). 5) கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒருவர் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் (யோவா.4:24; அப்.20:7). 6) கிறிஸ்தவனாக



மரியாள், யோவான்னாள் மற்றும் மகதலேனாமரியாள் தங்களுடைய கர்த்தரை சிலுவையில் அறைந்து, புறக்கணித்த மக்களால் செய்யப்பட்ட அப்பத்தை ஆராதனைசெய்யும்படி வாங்குவதற்கு மார்க்கெட்டுக்குச் சென்றார்கள் என கற்பனை செய்கிறீர்களா?இல்லை, பதிலாக, நான் பார்க்கிறேன் அவர்களுக்குள் திட்டமிட்டு ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய நாளில் மிகச்சிறந்த மாவினையும் எண்ணெயையும் எடுத்து, மிகச் சிறந்த பழத்தினை எடுத்து மிக அழகாக நினைவுகூருதலுக்கென்று ஆர்வத்துடன் தங்களது சிறப்புரிமையென எண்ணி ஆயத்தம்செய்ய முன் வந்திருப்பார்கள். சந்தேகமின்றி, அனைத்து நேரங்களிலும் அவள் ஆராதனைக்கென்று மிக அவசியமான அடையாளங்களாகிய அப்பம் தயாரிக்க தேவையான பொருட்களை ஆயத்தம் பண்ணுவதிலும், அவள் திருவிருந்தில் நினைவுகூர்ந்தவளாக மிகுந்த அன்புடன் அதையே நினைத்திருந்திருப்பாள்.

அவள் வழிந்தோடும் ஆவியுடன் கூட வேலை செய்திருப்பாள், அத்தோடு தேவனுக்கு தன்னுடைய சொந்த கைகளினால் இந்த சிறந்த சேவையை செய்யவும் உணர்த்தப்பட்டிருப்பாள். தேவன் இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான கரியங்களை ஆராதனையின் பகுதியாகவும் மேலும் சரீர கரங்களால் செய்யக்கூடிய இந்த வேலையை தேவன் தீர்மானித்துள்ளார். அவளுடைய கரங்கள் அந்த நாளில் கர்த்தருக்கென்று இப்பேர்பட்ட சேவை செய்ய அவள் கண்டிப்பாக அவள் உத்வேகத்துடன் செயல்பட்டிருப்பாள்.

இந்த பாத்திரங்கள் வழக்கமாக யூதர்களால் ஆராதனையில் தங்கம் மற்றும் வெள்ளியினால் குறிப்பாக வடிவமைக்கப்பட்டு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்குமென நான் நிச்சத்திருக்கிறேன், பிறகு இவைகளை தேவாலயத்திற்கென்று தனியாகப் பயன்படுத்தவும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய மரணத்தையும் அவருடைய அடக்கத்தையும் வர்ணிப்பதில் மிகுந்த கவனத்துடன் இந்த பாத்திரங்களைப் பயன்படுத்துவதில் அக்கறைசெலுத்தினர்.

அவர்கள் சர்வ சாதாரணமாகவோ, அரைமனதுடனோ இந்த பாத்திரங்களை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். மாறாக இது ஆராதனையில் ஒரு பகுதியாக இருந்தபடியினால் தங்களுடைய சொந்த நேரத்தை தேவனுடைய திருவிருந்தில் பங்குகொள்ளுவதற்காகவும் யாரெல்லாம் ஆயத்தம் பண்ணினார்களோ அவர்கள் அதை தங்களுடைய சிறப்புரிமையாக எண்ணினார்கள்.

தேவன் சரீரப் பிரகாரமான ஒவ்வொரு செயலில் செய்தது போல, ஆராதனை செய்யும் இடத்தை சுத்தம் செய்வதிலும், சுகமில்லாதவர்களுக்கு உணவு தயாரிப்பதில் அதே மனநிலையை கொண்டிருத்தலும் வேண்டும். எவ்விடத்திலெல்லாம் தேவன் தம்முடைய வேலையைச் செய்யும்படி மனிதகரங்களை நாடுகிறாரோ, அங்கெல்லாம் சந்தோஷத்துடன் அவர்கள் தனிப்பட்ட அழகான ஆராதனை என தங்களை அந்த சேவைக்கு ஒப்புக் கொடுத்தார்கள். நாம் குறுகிய பார்வைகொண்டிருந்தபோது எவ்வளவு காரியங்களை இழந்திருக்கிறோம், நாம் தேவனோடு நெருக்கமான உறவுக்குரிய சிறந்த வாய்ப்புகளை காணத் தவறியிருக்கிறோம்.

இயேசு மரித்தபோது, விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து எடுத்தார்கள். விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சுகந்த வர்க்கங்களுடனே துய்யதான மெல்லிய துப்படியினால் சுற்றி, அவருடைய சரீரத்தை சீலைகளில் சுற்றிக் கட்டி பின்பு விசுவாசிகள் கல்லறையில் வைத்தார்கள். அதன் பின்பு வாரத்தின் முதல்நாள் காலையில் கவலையோடு ஸ்திரீகளும் விசுவாசிகளும் அவர் மரணத்தில் நீண்டநாள் இருப்பார் என எதிர்பார்த்து அவருடைய சரீரத்தை ஆயத்தப் பண்ணும்படி சுகந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் ஆயத்தம் பண்ணி கல்லறைக்குக் கொண்டுவந்தார்கள்.

இது அந்த மரணத்தின் நினைவுகூருதலில், வாரத்தின் முதல் நாள் தோறும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் நினைவுகூர்ந்தது போல நாம் அவர் தம்முடைய மரணத்தை ஜெயித்தார் என நினைவுகூரும்படி கூடிவருகிறோம். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7).

நினைவுகூருதலில் தேவனுடைய குமாரனின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலில் கிறிஸ்தவர்கள் முக்கியமாக கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் மாதிரியாக வைக்கப்பட்ட புளிப்பில்லா அப்பத்திலும் பழச்சாறிலும் பங்கு கொள்ளும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த ஐக்கியத்திற்குரியதே நினைவுகூருதல் ஆகும். ஆனால் "ஆயத்தமாகுகிற" அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகமாக கிறிஸ்துவின் சபைகளில் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகிறார்களா? மெய்யான விருந்துக்கு நிழலாயிருந்த பஸ்கா அப்பத்தைப் போல புதிதான அப்பத்தை அன்புடனும், பயத்துடனும் விசுவாசிகளின் கைகளினால் தயாரிக்கப்படுகிறதா? இல்லை, கவலைக்குரியது, அதிகமான பிராந்திய சபைகளில் புதியதல்லாத உடைந்து போகக்கூடியதை இந்த தியாக நினைவுகூருதலுக்குப் பயன்படுத்துகின்றனர். யூதகுலத்தவர்களால் தயாரிக்கப்பட்ட அப்பமானது "பஸ்காவுக்காக அல்ல" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் அற்பமானதை மிகைப்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இருக்கலாம். அப்படி இருந்தபோதிலும் இது அற்பமான காரியமல்ல. கர்த்தர் ஆராதனையில் செய்யக்கூடியதாயிருந்த மிகச் சிறிய காரியங்களை பற்றிக்கூட மிகவும் கண்டிப்புள்ளவராயிருந்தார். யாத்திராகமம்34:25 பஸ்காவிற்குரிய அப்பத்தைக் குறித்து அவர் "எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்த வேண்டாம்; .." அவர் இன்னும் உபாகமம்16:4-லும்: "ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது..." என்றார். அவர் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் கண்டிப்பினை குறைத்து இருந்தாலும்கூட, வழக்கமான மனநிலையைக் காட்டிலும் தேவனுடைய குமாரனின் நினைவுகூருதலைப் பயத்தோடும், நிதானத்தோடும் கைக்கொள்வது நியாயமானதில்லை என நினைக்கிறீர்களா?

மேலும் தேவன் நமது கவனக்குறைவை அறிந்திருந்தாலும் கூட, எப்படியோ இதை வெளிப்படுத்தாமல் இருந்துகொண்டு கிறிஸ்துவுக்காக மனக்கிளர்ச்சியின்றி அக்கறையற்றவர்களாக கிறிஸ்தவர்கள் பின்பகுதியில் உட்கார்ந்து கொண்டு இருக்கையில் அவிசுவாசிகளை நம்முடைய நினைவுகூருதலுக்கு மிக இன்றியமையானதாக கிரியைசெய்ய அநுமதிக்கிறோம்.



இருப்பதற்கு ஒருவர் தேவனுக்கு உண்மையுள்ளவராக ஜீவிக்க வேண்டும் (வெளி.2:10; யாக்.1:12). தயவு செய்து மீண்டும் மீண்டும் இந்த குறிப்புகளை மறு ஆய்வு செய்து: "வேதாகமம் என்ன போதிக்கின்றதோ, அந்த வகையில் நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேனா?" என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

பிரியமானவரே, நம்முடைய ஜீவியமானது நழுவிக் கொண்டு செல்கிறது; நீங்கள் சீக்கிரமாய் கடந்து போவீர்கள் ஆகையால் நீங்கள் இன்றே நியாயத்தீர்ப்புக்காகவும், அதற்கு அப்பால் உள்ள காரியங்களுக்காகவும் ஆயத்தப்படுங்கள். சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஒரு கிறிஸ்தவராக மாத்திரம் இருங்கள். கர்த்தருடைய சபையின் ஒரு அங்கத்தினராக இருங்கள், மரண பரியந்தம் தேவனுக்கு உண்மையுள்ளவராய் ஜீவியுங்கள், பரலோகம் உங்களுடையதாகும்.

## இஸ்ரவேல் மற்றும் யூத இராஜாக்கள்

சாலொமோனுக்குப் பின்பு இராஜ்யம் இரண்டாகப்பிரிந்தது

❒ பத்து கோத்திரத்தார்
வடக்கு இராஜ்யம் இஸ்ரவேல்
என்றழைக்கப்பட்டனர்
முதல் இராஜா:
யெரொபெயாம் – 1இரா.14:19,20
கடைசி இராஜா:
ஓசெயா – 2இரா.17:1,2
மொத்தம் 19 இராஜாக்கள்

❒ இரண்டு கோத்திரம்
யூதா, பென்யமீன்
தெற்கு இராஜ்யம் யூதா
என்றழைக்கப்பட்டனர்
முதல் இராஜா:
ரெகொபெயாம் – 1இரா.14:21-22
கடைசி இராஜா:
சிதேக்கியா – 2இரா.24:18,19
மொத்தம் 20 இராஜாக்கள்

## நான் யார்? – Who Am I?



- நான் இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியக்காரனும் ஒரு அப்போஸ்தலனும் கூட
- சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்று பு.ஏ. ல் எழுதியிருக்கிறேன்.
- பொறுமைக்கு யோபுவை நினைப்பூட்டுகிறேன்.
- ஜெபத்திற்கு எலியாவை நினைப்பூட்டுகிறேன்.
- நாவும் நெருப்புத்தான் அது அநீதி நிறைந்த உலகம் என்று எழுதியுள்ளேன்.
- துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது இப்படியிருக்கக்கூடாது.
- புதியஏற்பாட்டில் நான் எழுதியது ஒரே ஒரு புத்தகம் மட்டுமே.

**வேதாகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்
ஆம் எனில் ☑ குறியிடவும்



*தற்சோதனை பகுதி – 39*

**39. பிரிவினையை வேதாகமம் அனுமதிக்கிறதா?**

1. நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்க வேண்டும் ☐ வசன ஆதாரம் -------------------------------------------
2. நான் பவுலைச் சேர்ந்தவன் என்று யாரும் பிரியவில்லை ☐ வசன ஆதாரம்-
3. பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான் ☐ வசன ஆதாரம்--------------------------------------------------
4. பிரிந்துபோகிறவன் எதிலும் தலையிடமாட்டான் ☐ வசன ஆதாரம் -
5. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது ☐ வசன ஆதாரம்-
6. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக சிறப்பானது ☐ வசன ஆதாரம் -----------------------------------------------
7. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படி..... அமைத்திருக்கிறார் ☐ வசன ஆதாரம்-
8. ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் பாடுபட வேண்டிய அவசியமில்லை ☐ வசன ஆதாரம்-----------------------------------
9. தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து பிரிந்தான் ☐ வசன ஆதாரம்-
10. எல்லாரும் நம்முடையவர்களென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள் ☐ வசன ------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** Contact Us: 94435 58041

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**





**கேள்விகள்**

1. 1தீமோ.3:2 வசனத்தில் "இருக்க வேண்டும்" (Must) என்ற வார்த்தை என்ன குறிப்பிடுகிறது? ------------------
2. ஒவ்வொரு தகுதிக்கும் "இருக்கவேண்டும்" (Must) என்ற வார்த்தை பொருத்தமானதாய் இருக்கிறதா? ------------------
3. "பாசங்கு செய்கிற மூப்பர்களைக்" குறித்து வேதாகமத்திலே நாம் வாசிக்கிறோமா?
4. ஒரு மனுஷன் ஒரு கிறிஸ்தவனாக இராதபட்சத்தில் தன்னை ஒரு "பாசாங்கு செய்கிற கிறிஸ்தவர்" என்று அழைத்துக் கொள்ள வேண்டுமா? --------------
5. ஒரு வேலை என்பது என்ன?
6. ஒரு சபை பொக்கிஷதாரர் ஒரு அதிகாரியாக இருக்கிறாரா?
7. தியோத்திரேப்புவின் விருப்பம் என்னவாக இருந்தது?
8. 1கொரி.14ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்கள் அதிகாரமுள்ள நிலைகளில் இருந்தார்களா?
9. ஒரு ஆலோசனைக் குழுவின் தலைவர் ஒரு அதிகாரியாக இருக்கிறாரா? ---
10. ஒரு ------------- சில பணிகளைச் செய்ய --------- ஒரு குழுவாக இருக்கிறது.

பெண்கள் பகுதி

# ஞாபகச்சின்னம் – The Memorial

*-Betty*



**முதல் நூற்றாண்டு சபையினுடைய ஞாபகச்சின்னத்தின் நியமம்**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும்.

"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து" (1கொரி.15:1-4).அநேகமாக இன்று கிறிஸ்துவின் சபைகளில் பல கிறிஸ்தவர்களுக்கு, இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல் மேஜையைச் சுற்றியுள்ள பல ஆண்களின் கூட்டத்தில் ஆரம்பித்து பாத்திரமானது திரும்பவும் கொடுத்தவர்களிடத்தே முடிவடைகிறது. கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகையில் ஒருவருடைய சொந்த மனச்சாட்சியை நிதானித்து அறிந்து பங்கு பெறுகிறதாயிருக்கிறது.

நினைவுகூருதல் என்பது நல்லது, நானே அதிலிருந்து ஒன்றையும் விலக்கவில்லை, ஆனால் ஆராதனைக்காவும், கிறிஸ்துவோடுகூடிய நெருக்கமான உறவுக்காகவும் கூடுகையில் நினைவுகூருதலுக்கென ஆயத்தமாவதில் நாம் ஒருவரையொருவர் சுட்டிக்காட்டுவது ஒரு அற்புதமான நிகழ்வில் வருத்தத்துக்குரியதாயிருக்கிறது.

என்பவன் முதன்மையாய் இருக்க விரும்பினான் (3யோவா.9). இப்பொழுது அநேகமான நவீன தியோத்திரேப்புகள் சபையில் இருக்கிறார்கள். அவர்கள் சுயமகிமையைத் தேடுகிற மனுஷராயிருக்கிறார்கள். அவர்கள் பெரிய மனிதராய் இருக்கும்படி நாட்டம் கொள்வதினாலே கர்த்தருடைய சபையைக் கெடுத்துப்போடுகிறார்கள். அவர்கள் சபையிலே ஒரு பணியை ஒரு பதவிக்காக மாற்றுவதின் மூலமாக இதைத் தொடங்குகிறார்கள். அவர்கள் ஒருவேளை ஒரு நற்கிரியையை செய்து கொண்டிருந்திருக்கலாம் ஆனால் அவர்கள் அதை ஒரு அதிகாரத்துக்குரிய நிலையாக மாற்ற முயற்சிக்கிறதனாலே அவர்கள் அதை கேடுபாடாக்கி இருக்கிறார்கள். நாமகரண சபைகளிலே இந்த கேடுபாடுகள் ஆபத்தானவைகளாயிருக்கிறது போல கர்த்தருடைய சபையிலும் இந்தக் கேடுபாடுகள் ஆபத்தானவைகளாயிருக்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு அப்பால் செல்ல வேண்டாம்.

**4. சபையின் ஆலோசனை குழுக்கள்:** அங்கத்தினர்கள் அடிக்கடி பணிகளை அதிகாரத்துக்குரிய நிலைகளாக மாற்றுவது என்பது ஆலோசனை குழுக்களிலே இருக்கிறதென்பது ஒரு குறிப்பிட்ட வழி முறையாக இருக்கிறது. "கமிட்டி அல்லது ஆலோசனை குழு" என்ற பதமானது ஒரு குறிப்பிட்டபணியைச் செய்யும்படியாக "உட்படுத்தப்பட்டவர்கள்" என்பதை குறிப்பிடுகிறது. சபையில் சில பணிகளைச் செய்யும்படி மனுஷர்கள் கேட்கப்படுகிற பொழுது அவர்கள் ஒரு வேளை சீக்கிரமாக தங்களை அதிகாரத்துக்குரிய ஒரு நிலையாக (ஸ்தானமாக) எண்ணக் கூடும். விசேஷமாக ஒரு ஆலோசனை குழுவின் தலைவரைப்பற்றிய காரியத்தில் உண்மையானதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதர் முதன்மையான நிலையை விரும்பும்படி சோதிக்கப்படுகிறார். ஒருவேளை அவர் சீக்கிரமாக தன்னை ஒரு நிரந்தரமான ஆலோசனைக் குழுவின் தலைவர் என்று அழைக்கக் கூடும். அவர் ஒரு வேளை பிராந்திய சபையிலே ஒரு ஸ்தானத்தை பெற்றுக் கொள்ள முயற்சி செய்யக் கூடும். அநேக மனுஷர்கள் சபைக்கட்டிடத்தின் மேற் கூரையை பழுது பார்க்கும்படி தேர்ந்தெடுக்கப்படலாம். இந்த மனுஷர்கள் தங்களை அதிகாரிகள் என்றும் மற்றவர்களுக்கு மேலாக அதிகாரம் உடையவர்கள் என்று கருதாத வரையில் இது நன்மையான காரியமாக இருக்கிறது. சபையானது சபைக்காக ஒரு பிரசங்கியாரை தேடிக்கண்டுபிடிக்கும்படியாக பல மனுஷர்களை கேட்கக் கூடும்.

ஏனென்றால் இந்த மனுஷர்கள் முதன்மையாய் இருப்பதை விரும்புகிறவர்களாய் இருந்து தங்களை "பிரசங்கியார் ஆலோசனை குழு" என்று அழைத்துக்கொள்கிறார்கள், சபையிலே தங்களை ஒரு அதிகார ஸ்தானமாக கற்பனை செய்து கொள்ளுகிறார்கள். விசேஷமாக இந்த ஆபத்தானது ஒரு மனிதர் தன்னை "ஆலோசனைக் குழுவின் தலைவர்" என்று அழைத்துக்கொள்ளும் பொழுது மிகவும் பெரிதானதாக இருக்கிறது. இந்த மனிதர் அந்த குறிப்பிட்ட குழுவை ஆள முயற்சி செய்து தன்னை ஒரு நிரந்தரமான அதிகாரியாக நிலை நிறுத்திக் கொள்கிறார். எப்பொழுது எல்லாம் மனுஷர்கள் அதிகாரத்தையும், முதன்மையான நிலையையும் உடையவர்களாய் இருக்கும்படி அனுமதிக்கிறார்களோ அப்பொழுதெல்லாம் ஆலோசனைக் குழுக்கள் அல்லது கமிட்டிகள் ஆபத்தானவைகளாக இருக்கின்றன, அவைகள் தவிர்க்கப்படவேண்டும் (3யோவான் 9). அவைகள் அடிக்கடி நிரந்தரமானவைகளாகி விடுகின்றன; அவர்களுடைய தலைமையாக இருப்பவர் ஒரு அதிகாரியாகிவிடுகிறார். அவர்கள் தாழ்மையுடனே ஒரு பணியைச் செய்வதற்கு பதிலாக அதிகாரத்தை கற்பனை செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் ஒரு நல்ல செயல்பாட்டை ஒரு அதிகார ஸ்தானமாக ஆக்குகிறார்கள். சபையின் ஆலோசனை குழுக்கள் அடிக்கடி கர்த்தருடைய சபையின் வேத வாக்கியங்களின்படியேயான எளிமையான ஆளுகையை கெடுத்துப்போடுகிறார்கள்.



# யார் இவர்?



விண்ணுலகில் உயர்வானவர்!

மண்ணுலகில் நிறைவானவர்!

பிதாவால் மகிமைப்படுத்தப்பட்டவர்!

பிதாவை மகிமைப்படுத்தியவர்!

இவர் அதரிசனமான பிதாவின் தற்சுரூபமானவர்!

இவர் சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர்!

இவருக்குள்ளே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது!

இவரைக் கொண்டும் எல்லாவற்றையும் இவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது!

அமைதியான உள்ளங்களிலே இவர் வாசம் செய்கிறார்!

பரிசுத்தவான்கள் மத்தியில் இருக்கிறார் அவர்களை நேசிக்கிறார்!

இவருடைய வார்த்தைக்கு பிசாசுகள் நடுங்கின!

மனவுருக்கமும் இரக்கமும் நீடிய பொறுமையும் உள்ளவர்!

அதிசயமானவர் அற்புதமானவர் அவர் சொல்ல ஆகும்!

அவர் கட்டளையிட காற்றும் கடலும் அவருக்கு கீழ்ப்படிந்தது!

மரணத்திற்கும் பாதாளத்திற்குறிய திறவுகோள்களை உடையவர்!

இவருடைய கட்டளையை ஏற்றவர்கள் உலகமெங்கும் சென்றனர்!

இவரை ஏற்றவர்கள் என்றும் மரணத்தைக் காண்பதில்லை!

இவருடைய இரண்டாம் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கிறோம்!


**யார் இவர்? அவர்தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து**

**– K.S.மாணிக்கவாசகம், திருச்சி**

**தெரிந்து கொள்ளுவோம்** *அயர்லாந்து (ஐரோப்பா)*

**அயர்லாந்து என்ற சொல்லுக்கு மேற்கிலுள்ள நாடு என்று பொருளாகும். அயர்லாந்து 'செலிட்டிக் புலி' என்று சிறப்பிக்கப்படுகிறது.**

***- K.R.K.Ravi Asir***




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்

**பாடம் - 20**

**கிறிஸ்துவின் சபைகள் எவ்வாறு சபையின் ஆளுகையைக் கெடுக்கக் கூடும்?**

**வரைகுறிப்பு**

1. **தகுதியற்ற அதிகாரிகளை நியமித்தல்**
2. **"பாசங்கு" செய்கிற மூப்பர்களை கொண்டிருத்தல்**
3. **பணிகளை பதவிகளாக மாற்றுதல்**
4. **சபையின் ஆலோசனை குழுக்கள்**

**கலந்துரையாடல்**

**1. தகுதியற்ற அதிகாரிகளை நியமித்தல்:** நாமகரண சபைகளில் உள்ளது போன்றே சபையின் ஆளுகையிலும் கேடுபாடாகி கர்த்தருடைய சபையிலும் அவைகள் காணப்படக்கூடும். சில கிறிஸ்துவின் சபைகள் வேதாகமத்தின் திட்டத்தை கவனத்துடனே பின்பற்றுகிறதில்லை உதாரணமாக வேதாகமம் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான தகுதிகளை வெளிப்படையாக அளித்து இருக்கிறது. ஒரு மனுஷன் அதிகாரியாக இருப்பதற்கு இந்த தகுதிகள் அனைத்தையும் அவன் "அவசியமாக" கொண்டிருக்கவேண்டும் (1தீமோ.3:2). இந்த "அவசியம்" (Must) தமிழில் - இருக்கவேண்டும் என்ற வார்த்தை "கட்டுப்படுத்துதலை" (கடமையை) குறிப்பிடுகிறது. தகுதிகள் மிகச் சரியாக அத்தியாவசியமானவை என்பதை வெளிப்படுத்தும் பலம்வாய்ந்த ஒரு வார்த்தையாக இது இருக்கிறது. இயேசு "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" (யோவா.3:7) என்று சொன்னார். தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மறுபடியும் பிறப்பது அத்தியாவசியமானதாக இருக்கிறது. அங்கே எந்த விதிவிலக்கும் இருக்க முடியாது. இதுவே மூப்பர்களுக்கான தகுதிபற்றிய காரியத்திலும் உண்மையானதாக இருக்கிறது. இந்த குணாதிசயங்கள் "அவசியம்" எதிர் கொள்ளப்படவேண்டும், இல்லையேல் அந்த மனிதர் தகுதியுள்ளவராக இருக்க முடியாது. "அவசியம்" (Must) என்ற பதம் கொடுக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு தகுதிக்கும் பொருந்துகிறதாய் இருக்கிறது. சில தகுதிகள் எதிர் கொள்ளப்பட்டு, சில தகுதிகள் விட்டுவிடப்படுமேயாகில் குறிப்பிட்ட நபர் தகுதியற்றவராக இருக்கிறார். ஒருவர் இந்த தேவையான தகுதிகளையும் உடையவராக இராவிட்டால் ஒரு அதிகாரி (மூப்பர்)யை நியமிக்கும் காரியத்தில் இது வேதாகம போதனையை மீறிநடக்கும் ஒரு செயலாக இருக்கிறது. இது கர்த்தருடைய சபையின் ஆளுகையை கெடுத்துப் போடுகிறதாயிருக்கும்.

**2. "பாசங்கு செய்கிற மூப்பர்களை" கொண்டிருத்தல்:** கிறிஸ்துவின் சபைகளின் மத்தியில் அடிக்கடி செய்யப்படும் மற்றொரு தவறு "பாசாங்கு செய்யும் மூப்பர்களை" கொண்டிருத்தல். மூப்பருக்கான தகுதிகள் இல்லாத மனுஷர்கள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் மூப்பர்களென்று தாங்கள் அழைக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களாயிருப்பதில்லை ஆனால் அவர்கள் மூப்பர்களாக "பாசாங்கு செய்ய விரும்புகிறார்கள். இது தேவனுடைய வார்த்தையை மீறும் ஒரு காரியமாக இருக்கிறது. ஒவ்வொரு சபைக்கு மேலாகவும் மூப்பர்களைக் குறித்த கிறிஸ்துவின் திட்டம் முன்மாதிரியாய் இருப்பதை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கிறது. ஒருமனிதர் கொடுக்கப்பட்டிருக்கிற சகல தகுதிகளிலும் முன்மாதிரி ஆனவராக இராவிட்டால், அவர் அங்கே இருந்தாலும் அவர்



செயல்படுகிறவராய் இருக்கமாட்டார். ஒரு மனிதர் கிறிஸ்தவராக இல்லையென்று நினைத்து கொள்ளுவோம், ஆனால் அவர் ஒரு பாசாங்கு செய்கிற ஒரு கிறிஸ்தவராக இருக்க விரும்புவாரேயாகில், மெய்யாகவே ஒரு கிறிஸ்தவராக அவர் இல்லாதிருந்தாலும், சபையானது அவர் இதை செய்யும்படி அனுமதிக்க வேண்டுமா? உண்மையாகவே கிறிஸ்தவராக இல்லாத எந்த ஒருவரும் "கிறிஸ்தவர்" என்ற நாமத்தைத் தரித்துக் கொள்ள முடியாது. இதே விதமாக மெய்யாகவே மூப்பராக இல்லாத ஒருவர் "மூப்பர்" என்ற நாமத்தை தரித்துக்கொள்ள முடியாது. இந்தவிதமாக செய்வது வேதவாக்கியங்களை மீறும் ஒரு காரியமாக இருக்கிறது. இது கிறிஸ்துவின் சபை ஆளுகைக்கான அவருடைய திட்டத்தைக் கெடுத்துப்போடும் ஒரு காரியமாக இருக்கிறது.

**3. பணிகளைப் பதவிகளாக மாற்றுதல்:** ஒரு நற்கிரியை செய்யப்படுவதை உருவாக்க ஒரு ஸ்தானத்தை (பதவியை) சபையிலே அடைவதென்பது கிறிஸ்துவின் திட்டத்தை அடிக்கடி பிராந்திய சபைகள் கெடுத்துப் போடுகின்றன என்பது மூன்றாவது வழியாக இருக்கிறது. ஒரு வேலை என்பது ஒரு செயல்பாடாக இருக்கிறது. ஒரு பிராந்திய சபையிலே கர்த்தருடைய பணத்தின் கணக்கை கையாளுவதாக இருக்கிறது. நாம் அப்படிப்பட்ட ஒரு மனிதரை "பொக்கிஷதாரர்" என்று அழைக்கிறோம். ஆனால் ஒரு பொக்கிஷதாரர் ஒரு அதிகாரியல்ல. அவர் ஒரு செயல்பாட்டைச் செய்கிற ஒருவராக மட்டுமே இருக்கிறார். கர்த்தருடைய பணத்தின் கணக்கை கையாளுவது என்பது ஒரு நற்கிரியையாக இருக்கிறது. வேதாகமத்திலே "பொக்கிஷதாரர்" என்று அழைக்கப்படுகிற எந்த சபை அலுவலும் இல்லை. ஆனால் சில சமயங்களில் பொக்கிஷதாரர்கள் தங்களுடைய பணியை ஒரு பதவியாக்க விரும்புகிறார்கள் இது தேவனுடைய வார்த்தைக்கு எதிரிடையானதாக இருக்கிறது. ஒரு சபை ஆராதனை வேளையில் சபை அங்கத்தினர்களை விழித்திருக்கும் நிலையில் வைத்திருக்கும்படியாக ஒரு நீளமான குச்சியை பயன்படுத்துகிற ஒரு மனிதர் ஒரு அதிகாரியல்ல. அவர் ஒரு கிரியையை செய்து கொண்டிருக்கிறார் அல்லது தேவையான ஒரு பணியைச் செய்து கொண்டிருக்கிறார் ஆனால் அப்படிப்பட்ட ஒரு மனிதர் தன்னைக் குறித்து சபையினுள்ளே தான் ஒரு பதவியில் இருப்பதாக கருதுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் சில பட்டங்களைத் தரித்துக் கொண்டிருக்கவும் தொடங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஒரு பணியை ஒரு பதவியாக மாற்றியிருக்கிறார் இதே விஷயம்தான் ஒரு பாடலை வழிநடத்துகிறவர் விஷயத்திலும் அடிக்கடிஉண்மையானதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நபர் பாடலை நன்றாக வழிநடத்துவதன் மூலமாக ஒரு நற்கிரியையை செய்ய முடியும். ஆனால் அவர் சபையிலே தன்னைக்குறித்து ஒரு அதிகாரி என்று எண்ணத் தொடங்கிறதினாலே அவர் ஒரு நற்கிரியையை கெடுத்துப்போடுகிறார் 1கொரி.14ம் அதிகாரத்தில் ஆராதனை வேளைகளில் உதவியாயிருக்கும்படி சபை அங்கத்தினர்கள் பல காரியங்கள் செய்தலைக்குறித்து நாம் வாசிக்கிறோம். ஆனால் வெறுமனே ஒரு நபர் ஆராதனையை வழிநடத்துகிறதிலே ஒரு பாகமாக இருப்பதினால் மாத்திரம் அவர் ஒரு அதிகாரி என்பதை குறிப்பிடுகிறதில்லை. அவர் ஒரு செயல்பாட்டை செய்கிறவராக மட்டுமே இருந்தார். அவருடைய பாகம் ஒரு பணியாக இருந்தது, அது ஒரு பதவியல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆராதனையிலும், சபையின் பணிகளிலும் பங்குள்ளவராக இருக்கிறார். ஆனால் இது நம்மெல்லாரையும் அதிகாரிகளாக்குகிறது இல்லை. மனுஷர்கள் அதிகாரத்தைக் குறித்து அதிகமாக சிந்திக்கும் பொழுது அவர்கள் செய்த பணியைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் செய்துகாட்டி லாபமடைய முடியும் என்று என்னும்போது அங்கே தொல்லை வருகிறது. அநேக மனுஷர்கள் தங்களால் என்ன நற்கிரியை செய்ய முடியுமோ அதைப்பார்க்கிலும் தங்களுக்கு முதன்மையான இடத்தை பெறவேண்டும் என்பதில் அதிக விரும்பமுடையவர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மனுஷனாகிய தியோத்திரேப்பு